**செய்தி வெளியீடு எண்: 982** **நாள்:21.12.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (21.12.2020) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் தென்காசி மாவட்டம், புளியங்குடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மதுரை மாவட்டம், கள்ளிக்குடி அரசு மேல்நிலைப் பள்ளி, நீலகிரி மாவட்டம், தேவாலா அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் திண்டுக்கல் மாவட்டம், மீனாட்சிநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில் 7 கோடியே 50 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ மாணவியரும் கல்வியில் சிறந்து விளங்கிடவும், சமுதாயத்தில் உயர்ந்த நிலையை எய்திடவும், கட்டணமில்லா கல்வி, விலையில்லா பேருந்து பயண அட்டைகள், மிதி வண்டிகள், சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினிகள், கல்வி உபகரணப் பொருட்கள், காலணிகள், இடைநிற்றலைக் குறைக்க ஊக்கத் தொகை வழங்குதல், பள்ளிகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நபார்டு கடனுதவி திட்டத்தின் கீழ் தென்காசி, மதுரை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 3 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 5 கோடியே 81 லட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர்;

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம், மீனாட்சிநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் 1 கோடியே 68 லட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடம், நூலக அறை, கணினி அறை மற்றும் கழிப்பறைகள்;

என மொத்தம் 7 கோடியே 50 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கல்வித் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

2019–20 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான கலா உத்சவ் போட்டி, மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்றது. தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டு, கருவி இசை (ஆண்) பிரிவில் செல்வன் எச். விஸ்வாஸ் முதல் பரிசும், வண்ண ஓவியம் தீட்டுதல் (ஆண்) பிரிவில் செல்வன் எஸ். வசந்த் முதல் பரிசும், கருவி இசை (பெண்) பிரிவில் செல்வி எம்.எஸ். அம்சவர்த்தினி மூன்றாம் பரிசும் வென்றனர். பரிசுகளை வென்ற மூன்று மாணாக்கர்களுக்கும் ரொக்கப் பரிசு, கேடயம் மற்றும் சான்றிதழ்கள் மத்திய கல்வி அமைச்சகத்தால் வழங்கப்பட்டது. பரிசுகளை வென்ற மூன்று மாணாக்கர்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இன்று சந்தித்து பாராட்டு சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் மாநிலத் திட்ட இயக்குநர், திருமதி க.லதா, இ.ஆ.ப., பள்ளிக் கல்வி ஆணையர் திரு.என்.வெங்கடேஷ், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**